போன்றவற்றைப் பராமரித்து வருகின்றவர்கள்; அதைப்போல, ஒலிபெருக்கிக் கருவிகளைப் பராமரித்து வருகிற பெருமக்கள் அத்தனை பேரும் சிறப்பாகப் பணியாற்றினார்கள். அவர்களும் நன்றிக்கு உரியவர்கள். அதைப்போல, இங்கே பொருத்தப்பட்டுள்ள எலக்ட்ரானிக் கடிகாரம் இருக்கிறதே, இதை நம்முடைய பேரவை வளாகத்தில் மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சருடைய அலுவலகப் பகுதி, அதேபோல இங்கேயுள்ள வசந்த மண்டபம், என்னுடைய அறைப்பகுதி, செயலாளருடைய அறைப்பகுதி எல்லாவற்றிலேயும் ஒரே சீராக இணைத்துப் பராமரிப்பதில் கடந்த 14 ஆண்டுகள் முடிந்து, இன்றைக்கு 15-ஆவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன் என்கிற ஒரு சிறப்பை திரு.வி.எஸ். சாமிநாதன் அவர்கள் தெரிவித்து இருக்கிறார். இவர் முன்னாளில் மாவட்ட கலெக்டராக இருந்த திரு.வி.எஸ். சுப்பையா அவர்களுடைய புதல்வர். திரு.வி.எஸ். சாமிநாதன் அவர்கள் இதை கடந்த 15 ஆண்டுகளாக மிகச் சிறப்பாகக் கட்டிக்காத்து வந்திருக்கிறார். அவருக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் கூட்டத் தொடர் மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுவது பற்றிய தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25(1)-இன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்படலாம்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்,

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [1995 மே 6

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

127. 24-5-1994 ஆம் நாளிட்ட வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் II(1)/CTSRE/37/94 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்வது குறித்து அத்துறையின் 19-1-1995 ஆம் நாளிட்ட 13 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

128. சென்னை-4, மைலாப்பூர், திருவாளர்கள் இராமகிருஷ்ணா மிஷன் மாணவர்கள் விடுதிக்கு விற்கப்படும் இரண்டு அறவை இயந்திர விற்பனையில் வரி தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 31-1-1995 ஆம் நாளிட்ட 23 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

129. 1993-94 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

130. கோயம்புத்தூர் மாவட்டம், மாவுத்தம்பதி கிராமத்தில் உள்ளடக்கிய சிற்றூர், சின்னம்பதி கிராம மக்கள் மீது இழைக்கப்பெற்ற கொடுமைகள் குறித்து நியமிக்கப் பெற்ற விசாரணைக் குழுவின் அறிக்கை மற்றும் அரசு எடுத்த நடவடிக்கை [1952 ஆம் ஆண்டு விசாரணை கமிஷன் சட்டம், 1952 (மத்தியச் சட்டம் 66/1952) 3(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்.

188. திருமதி ஜீனத் சர்புதீன் அவர்கள் எழுப்பிய உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை.